JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

STC.No. 305/2024 Crime No. - Station -

| Name | PW–1– ஜெயராமன் | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 30th day of January 2026 | | | |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் இருசக்கர வாகனம் வாங்கி விற்கும் தொழில் தமிழன் ஆட்டோ ஏஜென்சிஸ் என்கின்ற பெயரில் செய்து வருகிறேன். தற்போது வரை நான் தான் தமிழன் ஆட்டோ ஏஜென்சிஸ் நிறுவனத்தை நடத்தி வருகிறேன் என்றால், சரிதான். எதிரியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால், சுமார் 5 வருடங்களாக தெரியும். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், எதிரி எனது கடைக்கு வாகனத்தை சர்வீஸ் செய்ய வரும்போது எதிரி என்னிடம் ஒரு வாகனத்தை வாங்கி உள்ளார். அந்த வகையில் எனக்கு எதிரி தெரியும்.

எதிரி என்னிடம் புது வாகனம் வாங்கினார் என்றால், சரியல்ல. பழைய வாகனம் ஒன்றுதான் வாங்கினார். எதிரி வாங்கிய வண்டியின் பெயர் மற்றும் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால், ஜூபிடர் வாகனம் ஆனால் பதிவு எண் தற்போது ஞாபகம் இல்லை. எதிரி என்னிடம் வண்டி வாங்கிய அன்றைய தினம் வண்டிக்கான முழு தொகையும் கொடுத்து விட்டாரா என்றால், வேறொரு பைனான்ஸ் நிறுவனத்தில் பணம் வாங்கி எனக்கு பணம் கொடுத்தார். அந்த பைனான்ஸ் நிறுவனத்தின் பெயர் எனக்கு தெரியுமா என்றால், தனலட்சுமி ஆட்டோ பைனான்ஸில் பணம் வாங்கி என்னிடம் கொடுத்தார்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.30 06:57:38 +0530

தனலட்சுமி பைனான்ஸ் எங்கு உள்ளது என்றால், பவானியில் பேருந்து நிலையம் அருகே உள்ளது.

எதிரிக்கு பைனான்ஸ் அனைத்தும் நான் தான் ஏற்பாடு செய்து கொடுத்தேன் என்றால், சரிதான். நான் எதிரிக்கு பைனான்ஸில் பணம் ஏற்பாடு செய்த விவரம் தெரியுமா என்றால், எதிரிக்கு தெரியும். நான் இருசக்கர வாகனம் வாங்குபவர்களுக்கு பைனான்ஸ் வாங்கி தருவேன் என்றால், சரிதான். நான் பைனான்ஸ் பணம் வாங்கி தரும்போது அதற்கு ஆதரவாக காசோலை போன்றவை வாங்கி தருவேன் என்றால், சரியல்ல. ஆதார் கார்டு போன்றவை தான் வாங்குவேன்.

எனக்கும், எதிரிக்கும் எந்த வரவு செலவும் கிடையாது என்றால், சரிதான். எதிரி எனது வங்கி கணக்கிலோ அல்லது நேரடியாகவோ பணம் எதுவும் செலுத்தவில்லை என்றால், சரிதான். நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் இருசக்கர வாகனம் தற்போது யாரிடம் உள்ளது என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. எதிரி மேற்படி இருசக்கர வாகனத்தை என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால், சரிதான்.

நானும், எதிரியும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் என்றால், சரிதான். என்னிடம் பணம் வாங்கும் சமயத்தில் எதிரி என்ன வேலையில் இருந்தார் என்கின்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், முனியனூர் டாஸ்மாக் கடையில் வேலை செய்து கொண்டிருந்தார். எந்த வருடம் வேலை செய்தார் என்று விவரம் எனக்கு தெரியுமா என்றால், 2023ம் வருடம் வேலை செய்தார். தற்போது எதிரி என்ன வேலை செய்து வருகிறார் என்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. ஆனால் அவரை பணியிலிருந்து பணி நீக்கம் செய்ததாக மட்டும் நான் கேள்விப்பட்டேன்.

நான் அனுப்பிய சட்ட அறிவிப்பில் 2024 ஆம் ஆண்டு எதிரி டாஸ்மாக் கடையில் பணிபுரிந்ததாக தான் சொல்லி உள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறுதான் எதிரி என்னிடம் கூறினார். நான் அனுப்பிய சட்ட அறிவிப்பில் எதிரிக்கு எங்க வைத்து பணம் கொடுத்தேன் என்கின்ற விவரம் எதுவும் கூறவில்லை என்றால், சரிதான். எதிரி என்னிடம் வீட்டில் வந்து வாங்கினார். எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் என்னிடம் பணம் இருந்தது என்பதை காட்ட எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.30 06:57:45 +0530

எனக்கு இருசக்கர வாகனம் வாங்கி விற்பது மற்றும் எனக்கு தோட்டத்திலிருந்து பணம் வருகிறது. எதிரி அம்மாபேட்டையில் 11–11 என்கின்ற பெயரில் ஹோட்டல் நடத்தி வந்தார் என்கிற விவரம் எனக்கு தெரியும் என்றால், சரிதான். பிரணவ் ஆயில்ஸ் என்பதையும் எதிரி நடத்தி வந்தார் என்கின்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எதிரி நடத்தவில்லை, ஆனால் அவரது தோட்டத்தில் இருந்தது. எதிரி பிரணவ் ஆயில்ஸ் நடத்தி வருகிறார் என்று எனது சட்ட அறிவிப்பில் கூறியுள்ளது தவறு என்றால், சரியல்ல. அவர் நடத்தி தான் வருகிறார்.

எதிரி என்னிடம் வாங்கிய ஜூபிடர் வாகனத்தின் பதிவு எண் TN 24 – 0022 என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரி என்னிடம் பணம் கேட்கவில்லை என்றாலும், நான் அதற்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும், சரியல்ல. எதிரி என்னிடம் வாகனம் வாங்கும்போது அதற்கு ஆதரவாக காசோலை கொடுத்தார் என்றால், சரியல்ல. எதிரி வாங்கிய வாகனத்திற்கு நான் நடத்தி வரும் பைனான்ஸில் தான் பணம் கொடுத்தேன் என்றால், சரியல்ல. நான் எந்த வருடம் எதிரிக்கு வாகனத்தை விற்பனை செய்தேன் என்றால், வருடம் ஞாபகம் இல்லை.

எதிரி 2021 ஆம் வருடம் வாகனம் வாங்கியதற்கு எனது வங்கி கணக்கிற்கு ரூ.4600/– பணம் செலுத்தினார் என்றால், சரிதான். நான் அந்த பணத்தை பைனான்ஸிற்கு செலுத்தி விட்டேன். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரிக்கு நான் பணம் வாங்கிக் கொடுத்ததாக சொல்லப்படும் பைனான்ஸ் தெரியும் என்றாலும், அவ்வாறு தெரிந்திருந்தால் அவர் நேரடியாக பைனான்ஸிற்கு பணம் செலுத்தி இருப்பார் என்றாலும், என்னிடம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், சரியல்ல. என்னிடம் இருக்கும் வாடிக்கையாளர்கள் அனைவரும் நேரடியாக பைனான்ஸிற்கு பணம் அனுப்ப மாட்டார்கள், என்னிடம் அனுப்பி நான் தான் பைனான்ஸிற்கு பணம் கட்டுவேன்.

எனது அனைத்து வாடிக்கையாளர்களும் என்னிடம் பணம் கட்டுவதை எனது வருமான வரி கணக்கில் காட்டி வருமான வரி செலுத்துவேன் என்றால், சரியல்ல. வருமான வரி செலுத்தும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை. நான் நடத்தி வரும் தமிழன் ஆட்டோ ஏஜென்சி என்பதற்கும் நான் வருமான வரி செலுத்துவது இல்லை என்றால் மேற்படி தமிழன் ஆட்டோ ஏஜென்சியை நான் 2015 ஆம் வருடமே மூடிவிட்டேன். ஆனால் அதே பெயரை வைத்து தற்போது பழைய இருசக்கர வாகனம்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.01.30 06:57:53 +0530

வாங்கி விற்கும் கன்சல்டிங் செய்து வருகிறேன். தமிழன் ஆட்டோ ஏஜென்சிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் நான்தான் என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், என்னிடம் வாங்கிய ஜூபிடர் வாகனத்தை எதிரி ஒரு மாதம் கழித்து என்னிடம் ஒப்படைத்து விட்டார் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.30 06:58:00 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.